# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசர சிறப்புக்கூட்டம் பெப்ரவரி திங்கள் 02–ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறும். தாங்கள் தவறாது கலந்து கொள்ள அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தலைவர்
குளச்சல் நகராட்சி மன்றம்

**பொருள் எண்:1**
நகராட்சி மன்றத் தலைவர் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.

குளச்சல் நகராட்சி சுனாமி பேரழிவு பகுதிகளை மறுசீரமைப்பு செய்வதற்கு மிக அவசியமானதும், அத்தியாவசியமானதுமான பணிகளுக்கு நகர்மன்றத் தீர்மானம் எண். 33 நாள் 06.12.2006 அன்று நகர்மன்றத்தால் தேர்வு செய்யப்பட்ட புதிய பணிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள அனைத்து பகுதிகள் ( தெரு, சந்து உட்பட) மற்றும் பிரதான பணியான பாலம் மற்றும் புறவழி சாலை உட்பட 16 பணிகள் தேர்வு செய்யப்பட்டது. நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குநர் அவர்களும், கண்காணிப்புப் பொறியாளர் அவர்களும் 30.01.2007 மற்றும் 31.01.2007 ஆகிய நாட்களில் தேர்வு செய்யப்பட்ட மேற்படி பணிகளை பற்றிய ஆய்வினை குளச்சல் நகருக்கு வந்து மேற்கொண்டனர். ஆய்விற்கு பின்னர் நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குநர், கண்காணிப்புப் பொறியாளர், நகராட்சி மன்றத் தலைவர் மற்றும் ஆணையர் (பொறுப்பு) ஆகியோர் கலந்து கொண்ட ஆலோசனையின் முடிவில் நிர்வாக நலன் மற்றும் பொது நலன் கருதி அவசியமானதும், அத்தியாவசியமானதுமான மேற்படி பணிகளை விரைவில் முடிக்க வேண்டும் என்ற அரசு கோட்பாட்டுக்கு ஏற்ற வகையில் மேற்படி 16 வேலைகளையும் கீழ்குறிப்பிட்டுள்ளவாறு 6 வேலைகளாக Repackaging செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. இவ்வாறு Repackaging செய்யப்பட்டுள்ள மேற்படி வேலைகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை லட்சத்தில் |
|---|---|---|
| 1. | 3 லட்சம் லிட்டர் கொள்ளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி மற்றும் 3 எண்ணம் ஆழ்துழாய் கிணறுகள் மற்றும் பம்பிங் மெயின் அமைத்தல் | 30.00 |
| 2. | கொட்டில் பாடு, ஜோசப் பெனடிக்ட் காலனி மற்றும் அந்தோணியார் காலனியில் சிமெண்ட் தளம் மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல், கொட்டில்பாடு, ஜோசப் பெனடிக்ட் காலனியில் 3 எண்ணம் சிறுபாலங்கள் அமைத்தல் | 30.00 |
| 3. | மலிக்காகினறு, வெள்ளிபிள்ளையார் கோயில் ரோடு மற்றும் ஆசாத் நகர் சாலையில் தார் தளம் மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் | 30.00 |
| 4. | துறைமுகத்தெரு I, II & III, ஈழக்காணிவிளை, மாதாகாலனி, சாம்பசிவபுரம் மற்றும் மரமடி தெருக்களில் சிமெண்ட் தளம் மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல், காந்தி சந்திப்பு முதல் மரமடி சந்திப்பு வரை மழைநீர் வடிகால் அமைத்தல். | 78.50 |
| 5. | களிமார் பாலம் முதல் சைமன்காலனி பாலம் வரை தடுப்பு சுவர் மற்றும் தார் தளம் அமைத்தல், வாய்க்கால் தெருவில் பாலம் கட்டுதல். | 310.00 |
| 6. | கொட்டில்பாடு முதல் பள்ளி சந்திப்பு வரை, சாம்பசிவபும் முதல் ஏசுதாஸ் காலனி வரை மற்றும் சைமன்காலனி பாலம் முதல் கடல் வரை கழிவு நீர் வடிகால் அமைத்தல் | 105.00 |
| | **மொத்தம்** | **583.50** |

**தீர்மானம் எண். 92 ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 2**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2006–2007 குளச்சல் தொகுதி திட்டப்பணிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது விவரம் மன்றத்தின் பார்வைக்கு.

| வ. எண் | வேலையின் பெயர் | நிதி ஒதுக்கீடு (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | குளச்சல் நகராட்சி பர்னட்டிவிளை பகுதியில் படிப்பகம் கட்டுதல் | 1.00 |
| 2 | குளச்சல் நகராட்சி பழைய குளச்சல் கடையிலிருந்து செட்டித்தெரு வரை சிமெண்ட் சாலை அமைத்தல். | 3.00 |

**அ.குறிப்பு** : அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 93 – அலுவலக குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் பெப்ரவரி திங்கள் 28–ம் நாள் புதன்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறும். தாங்கள் தவறாது கலந்து கொள்ள அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தலைவர்
குளச்சல் நகராட்சி மன்றம்

## பொருள்கள்

**பொருள் எண். 1**

இந்நகராட்சி நகர்மன்றத் தலைவர் திரு.ஜே. ஜேசையா, அவர்கள் அலுவலக விசயமாக கீழ்கண்ட மாதங்களுக்கு பயணம் மேற்கொண்ட வகையில் பயணப்படி தொகை ரூ. 3324/– வழங்க மன்ற அனுமதிக்காக மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

| மாதம் | | தொகை |
|---|---|---|
| டிசம்பர் 2006 | – | 2052/– |
| ஜனவரி 2007 | – | 1272/– |
| மொத்தம் | – | 3324/– |

**அ.குறிப்பு** : மன்ற அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 94 – அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 2</u>**

இந்நகராட்சி நகர்மன்ற துணைத் தலைவர் திருமதி. எ.டி. லதா அவர்கள் கோயம்புத்தூர் நகரியல் பயிற்சியில் கலந்து கொண்டமைக்கு பயணப்படி ரூ. 780/– வழங்க அனுமதிக்காக மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 95 – அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 3</u>**

இந்நகராட்சி மேலாளர் திரு.த.மு.முகம்மது முகைதீன் பதவி உயர்வு காரணமாக சிவகாசி நகராட்சியில் இருந்து மாறுதல் ஆகி வந்த வகைக்குரிய மாறுதல் பயணப்படி ரூ. 3989/– வழங்க அனுமதிக்காக மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 96 – அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 4</u>**

இந்நகராட்சியில் பணிபுரியும் கீழ்கண்ட பணியாளர்கள் அலுவலக விசயமாக பயணம் மேற்கொண்ட வகையில் பயணப்படி வழங்க மன்ற அனுமதிக்காக மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியாளர் மற்றும் பதவி | மாதம் | தொகை |
|---|---|---|---|
| 1. | திரு.த.மு. முகம்மது முகைதீன், மேலாளர் | டிசம்பர் 2006<br>ஜனவரி 2007 | 1385/–<br>492/– |
| 2 | திருமதி. எஸ். சுதா, நகரமைப்பு ஆய்வாளர் | டிசம்பர் 2006<br>ஜனவரி 2007 | 138/–<br>1329/– |
| 3 | திரு. ஸ்டீபன், வருவாய் உதவியாளர் | ஜனவரி 2007 | 108/– |
| 4 | திரு.ஆர்.தங்கராஜ். துப்புரவுப்பணி மேற்பார்வையாளர் | ஜனவரி 2007 | 1258/– |
| 5 | திரு. மணி, துப்புரவுப்பணி மேற்பார்வையாளர் | ஜனவரி 2007 | 263/– |
| 6 | திருமதி.கே.மீனாம்பாள், மகப்பேறு ஆயா | ஜனவரி 2007 | 329/– |
| 7. | திரு. செல்வன் ஜார்ஜ், பொ.ப.மேற்பார்வையாளர் | ஜனவரி 2007<br>பிப்ரவரி 2007 | 246/–<br>348/– |

**அ.குறிப்பு :** அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 97 – அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.: 5</u>**

இந்நகராட்சியில் சுனாமி பிரிவில் பணிபுரியும் கீழ்கண்ட பணியாளர்கள் அலுவலக விசயமாக பயணம் மேற்கொண்ட வகையில் பயணப்படி வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | பணியாளர் மற்றும் பதவி | மாதம் | தொகை |
|---|---|---|---|
| 1. | திரு.ச. ரவி, உதவி செயற் பொறியாளர் | 02/2007 | 5884/– |
| 2. | திருமதி. வி.எஸ். சுப்பு லெஷ்மி, இளநிலை பொறியாளர் | 01/2007 | 1397/– |
| 3. | திருமதி. டி.எஸ். சோபா, பணி ஆய்வர் | 01/2007 | 1627/– |
| 4. | திருமதி. எம். சாந்தி, சமுதாய அமைப்பாளர் | 01/2007 | 202/– |

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 98 – அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 6</u>**

இந்நகராட்சி நகர் மன்ற உறுப்பினர்களின் அறைக்கு நாற்காலிகள் தேவைப்படுகின்றது. எனவே மேற்படி நாற்காலிகள் வாங்குவதற்கான உத்தேச செலவினம் ரூ. 5000/– க்கும் அதற்கான விலைப்புள்ளி கோருவதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : அவசர அவசியத்தின்பேரில் நகராட்சி மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதையும், குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள அனித் பர்னிச்சர் லேண்ட், குளச்சல் என்பவருக்கு நாற்காலிகள் வினியோகம் செய்த வகையில் ரூ. 4900/– வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 99 – அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 7</u>**

இரண்டாவது மாநில நிதிக்குழு திட்டத்தில் இந்நகராட்சிக்குட்பட்ட காருண்யா பள்ளி அருகில் தெற்கு கள்ளியடைப்பு சாலையில் பாலம் மற்றும் புயல் வெள்ள வடிகால் கட்டுவதற்கு ரூ. 2.40 லட்சம் அனுமதிக்கப்பட்டது. அதன்பேரில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நகர்மன்றத் தீர்மானம் எண். 31 நாள் 06.12.2006–ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பணிகளை செயல்படுத்திட 13.02.2007–ல் ஒப்பந்தப்புள்ளி கேட்கப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | தெற்கு கள்ளியடைப்பு சாலையில் காருண்யா பள்ளி அருகில் பாலம் மற்றும் வடிகால் கட்டுதல். | 2.40 லட்சம் | 1) P.தங்கமணி<br><br>2)C.சிவதாணுமாலையன் | 0.92 % மதிப்பீட்டை விட அதிகம்<br>0.19 % மதிப்பீட்டை விட குறைவு. |

**<u>அ.குறிப்பு</u>** : குறைந்த தொகைக்கு கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 100 – அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 8</u>**

குளச்சல் நகராட்சி கள்ளியடைப்பு பகுதி மற்றும் சிங்கேன்காவு பகுதிகளில் குடிநீர் வினியோகம் செய்யும் பகிர்மான குழாயில் அடைப்பு ஏற்பட்டு குடிநீர் சரிவர வினியோகம் செய்ய இயலாத நிலையில் இருந்ததாலும், நகராட்சியின் குடிநீர் லாரி தகுதிச் சான்று பெறும் பொருட்டு பழுதுகளை சரி செய்வதற்காக சென்று விட்டதாலும், தனியார் குடிநீர் லாரி மூலம் சம்மந்தப்பட்ட பகுதிகளுக்கு குடிநீர் வினியோகம் செய்வதற்கும் அதற்கான செலவினம் ரூ. 5750/– வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : அவசர அவசியத்தின் பேரில் நகராட்சி மன்றத் தலைவரின் முன் அனுமதியின் பேரில் பணி மேற்கொண்டதையும், அதற்கான செலவினம் ரூ. 5750/– னை சம்மந்தப்பட்டவருக்கு வழங்கியதையும்
மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 101 – அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 9</u>**

குளச்சல் நகராட்சியில் IDSMT திட்டத்தின் கீழ் கொட்டில்பாடு அருகில் மேற்கு கடற்கரை சாலையிலிருந்து வெள்ளிப்பிள்ளையார் கோயில் நோக்கி செல்லும் சாலையில் தார்தளம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேற்படி சாலையில் இடையூறாக 5 மின்கம்பங்கள் உள்ளன. இதனை மாற்றியமைப்பதற்கான விண்ணப்பக் கட்டணம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** அவசர அவசியத்தின் பேரில் நகராட்சி மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ரூ.500/– விண்ணப்பக் கட்டணமாக தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்தியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 102 – அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 10</u>**

இந்நகராட்சி குடிநீர் வினியோகத்திற்கென 11 ஆழ்துளை கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ள 11 எண்ணம் மோட்டார்களில் 4 எண்ணம் மோட்டார்கள் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளன. இவை பழுதாகி நிற்கும் பட்சத்தில் நகரில் குடிநீர் வினியோகம் பாதிக்கும் நிலை உருவாகும். எனவே இதனை கருத்தில் கொண்டு பொது நிதியில் நிலைமைக்கேற்ப ரூ. 30,000/– மதிப்பீட்டில் 10 எச்.பி. நீர்மூழ்கி மோட்டார் (300 m x 100 m head) ஒன்று வாங்குவதற்கும் அதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** அவசர அவசியத்தின் பேரில் நகராட்சி மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மோட்டார் வாங்க ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 103 – அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 11</u>**

இந்நகராட்சி குடிநீர் வினியோகத்திற்கென 10 எச்.பி. நீர்மூழ்கி மின்மோட்டார் வாங்கும் பணிக்கு 08.02.2007–ல் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

(1) திரு.எஸ். தெய்வசாமி – 0.02 % மதிப்பீட்டைவிட குறைவு.

(2) திரு.எஸ்.பி. சுதர்சனம் – 0.01 % மதிப்பீட்டை விட அதிகம்.

இதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.எஸ்.தெய்வசாமி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** அவசர அவசியத்தின் பேரில் நகராட்சி மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதியின் பேரில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. தெய்வசாமி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 104 – அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 12</u>**

பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2006–2007–ன்கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட பாலத்தன்கரை பகுதியில் ஆழ்குழாய் கிணறு அமைக்க ரூ. 1.00 லட்சம் (மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செய்ல்முறை ஆணை எண். அ5/3948/2006–07 நாள் 10.02.2007–ல் ) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பகுதியில் ஆழ்குழாய் கிணறு அமைக்க ரூ. 1. 20 லட்சம் தேவைப்படுகின்றது. எனவே ஒதுக்கீட்டு தொகை போக மீதி தொகையான ரூ. 20,000/–த்தை இந்நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும், பணி தொடர்பான ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** அவசர அவசியத்தின் பேரில் நகராட்சி மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 105 – அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 13</u>**

சட்டமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் குளச்சல் நகராட்சி பகுதிக்குட்பட்ட பாலத்தன்கரை பகுதியில் ஆழ்குழாய் கிணறு அமைப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் அ3/8135/2006 நாள் 13.02.2007–ல் ரூ. 1.00 லட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்படி பகுதியில் ஆழ்குழாய் கிணறு அமைக்கவும், ஒரு மின் மோட்டார் பொருத்தவும், ரூ. 1.40 லட்சம் தேவைப்படுகின்றது. எனவே ஒதுக்கீடு போக மீதமுள்ள தொகையான ரூ. 40,000/–த்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், பணி தொடர்பான ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** அவசர அவசியத்தை முன்னிட்டு நகராட்சி மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 106 – அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 14</u>**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித எண். 66830/2006/அ2 நாள் 27.01.07–ல் 2006–2007–ம் ஆண்டிற்கு 12–வது நிதிக்குழு திட்ட மானியம் முதல் தவணைத் தொகையாக ரூ. 12,63,442/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத் திட்ட நிதி கீழ்கண்ட தலைப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளுக்கு ஒதுக்கீடு செய்யவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கு.

| | | |
|---|---|---|
| 1 | 50 % நிதி திடக்கழிவு மேலாண்மை செயலாக்க பணிகள் செய்திட. | ரூ. 6,31,721/– |
| 2 | 25 % நிதி சாலை மற்றும் வடிகால் பராமரிப்பு பணிகள் செய்திட. | ரூ. 3,15,861/– |
| 3 | 25 % நிதி கணனி பராமரிப்பு மற்றும் மின்கட்டணம் செலுத்திட. | ரூ. 3,15,860/– |

**அ.குறிப்பு :** பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 107 – பதிவு செய்யப்பட்டது.**

**<u>பொருள் எண்.15</u>**

குளச்சல் நகராட்சிக்கு 12–வது நிதிக்குழு திட்டத்தின்கீழ் 2006–2007–ம் ஆண்டிற்கு திட்டப்பணிகள் மேற்கொள்வதற்கு ரூ. 25,26,884/– ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள. இதில் முதல் தவணையாக ரூ. 12,63,442/– நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித எண். 66830/2006/அ2 நாள் 27.01.2007 மூலம் விடுவிக்கப்பட்டுள்ளது. இதில் 25% ரூ. 6,31,721/– சாலைப் பணிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் நகராட்சி மன்றத் தலைவர் அவர்களின் அறிவுரையின் பேரில் பள்ளி ரோட்டின் ஒரு பகுதிக்கு தார் சாலை அமைக்கும் பணிக்கு ரூ. 6.32 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது. இதில் ஒதுக்கீட்டு தொகை போக மீதி தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 108 – அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 16</u>**

இந்நகராட்சி பகுதியில் சுனாமி பாதித்த இடங்களில் உள்ள சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி மற்றும் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி சுனாமி சம்மந்தமாக சில்லரை செலவினம் மற்றும் எழுது பொருட்கள் வாங்குவதற்கென நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 10036/2006/UPA1 நாள் 07.12.2006–ன் படி ரூ. 10,000/– ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை மேற்படி பயிற்சி வகுப்பு மற்றும் திட்டப்பணிகள் சம்மந்தமாக எழுது பொருட்கள் மற்றும் சில்லரை செலவினங்கள் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 109 – அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 17**

குளச்சல் சட்டமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சி திட்ட நிதி 2006–07–ன் கீழ் குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பகுதியான பர்னட்டிவிளையில் படிப்பகம் கட்டும் பணிக்கு ரூ.1.00 லட்சம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை எண்:அ3/8135/2006–07 நாள்: 09.01.2007–ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. இது தொடர்பாக 20.02.2007–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

1) திரு.பி. தங்கமணி – 1.92 % மதிப்பீட்டைவிட அதிகம்.
2) திரு.பி. ஜெயராஜ் – 0.13% மதிப்பீட்டைவிட குறைவு

இதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.பி. ஜெயராஜ் என்பவரது ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

**அ.குறிப்பு :** குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 110 – அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 18**

குளச்சல் சட்டமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சி திட்ட நிதி 2006–07–ன்கீழ் குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பகுதியான பழைய கடைத்தெரு முதல் செட்டித் தெரு வரை சிமெண்ட் தளம் அமைக்கும் பணிக்கு ரூ.3 .00 லட்சம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை எண்:அ3/8135/2006–07 நாள்: 09.01.2007–ன்படி நிர்வா அனுமதி வழங்கப்பட்டது. இது தொடர்பாக 20.02.2007–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

1) திரு.பி. ஜெயராஜ் – 0.04 % மதிப்பீட்டைவிட குறைவு
2) திரு.பி. தங்கமணி – 0.32 % மதிப்பீட்டைவிட அதிகம்.

இதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.பி. ஜெயராஜ் என்பவரது ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

**அ.குறிப்பு** : குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 111 – அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 19**

இந்நகராட்சி குடிநீர் லாரி எண். டி.என்.74 –Z- 5304 –க்கு தகுதிச்சான்று கட்டணம் செலுத்திய வகையில் ரூ. 800/– சம்மந்தப்பட்டவருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 112 – அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 20**

குளச்சல் நகராட்சி எல்கைக்குட்பட்ட குளச்சல் புரதான சாலையில் தங்கம் மருத்துவமனை அருகில் 3'' குடிநீர் பிரதான குழாய் வெடித்து குடிநீர் வீணாகி, குடிநீர் விநியோகமும் பாதிக்கப்பட்டது. ஆகவே அதனை உடனே சரி செய்வதற்கு தேவையான பொருட்கள் வாங்குவதற்கான செலவு தொகை ரூ. 500/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : அவசர அவசியத்தின் பேரில் நகராட்சி மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொண்டதையும் அதற்கான செலவு தொகை ரூ. 500/– சம்மந்தப்பட்டவருக்கு வழங்குவதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 113 – அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 21**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வெள்ளிப்பிள்ளையார் கோயில் அருகில் இருக்கும் குடிநீர் நீரேற்றும் மோட்டார் அறைகளில் கூடுதல் குதிரை திறன் கொண்ட மின் மோட்டார்கள் அதிக அளவில் தண்ணீரை உறிஞ்சுவதற்காக பொருத்தப்பட உள்ளன. எனவே கூடுதல் மின்பளு(Additional Load) தேவைப்படுவதால் அதற்கான விண்ணப்ப பதிவு கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் செலுத்த மின்சார வாரியத்திலிருந்து வரப்பெற்ற கடிதத்தின் அடிப்படையில் ரூ.21,100/– மின்சார வாரியத்திற்க செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : அவசர அவசியத்தின் நகராட்சி மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ரூ. 21,100/– செலுத்தியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 114 – அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.22**

நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை–2 அவர்களின் செயல்முறை ஆணை எண்.18090/02/UP-1 நாள் 22.10.2003 அவர்களின் செயல்முறையில் குளச்சல் புராதன நகருக்கு குளச்சல் பஸ் நிலையத்தின் அருகில் காலியாகவுள்ள (வார்டு–பி, பிளாக் 3, சர்வே எண். 29 பிரிவு) இடத்தில் உள்கட்டமைப்பு வசதியினை ஏற்படுத்தும் நோக்கத்தில் ரூ. 30.00 லட்சத்தில் திட்டப்பணிகள் மேற்கொள்ள நிர்வாக ஒப்புதல் வழஙகப்பட்டுள்ளதை தொடர்ந்து நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை–2 அவர்களின் செயல்முறை ஆணை எண். 18090/02/யுபி1, நாள்:08.06.05–ன் படி நிதி விடுவிக்கப்பட்டது.

குளச்சல் நகராட்சி புராதன நகர மேம்பாட்டு திட்டத்தின்கீழ் விடுவிக்கப்பட்ட நிதியை பயன்படுத்தி நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (திருநெல்வேலி) மண்டலத்தால் ஒப்புதல் வழங்கப்பட்ட வடிவமைப்பு வரைபடத்தில் (பி.பி./ஆர் Tvl.37/2003) ஒப்புதல் பெற்ற இடத்திற்கு பதிலாக C.R.Z பகுதியில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் கட்டுமானப் பணிகள் செய்யப்பட்டுள்ளது. C.R.Z அனுமதி பெறாமல் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இதனை கவனத்தில் கொள்வதுடன் C.R.Z. பகுதியில் கட்டப்பட்டுள்ள கட்டிடத்திற்கு SCZMA –ன் உரிய அனுமதி பெறப்பட்டால் தான் புராதன நகர திட்ட நிதியை பயன்படுத்தியதை ஏற்க இயலும் இல்லையெனில் புராதன திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட நிதி பயன்படுத்தப்படவில்லை என்றே கருதப்படும் என நகர் ஊரமைப்பு இயக்குநர் (ந.க.எண். 18090/02/UP1 நாள் 04.01.2007) சென்னை அவர்கள் கடிதத்தில் தெரிவித்துள்ளார்கள். விபரம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

**தீர்மானம் எண். 115 – சம்மந்தப்பட்ட கோப்புகளை பார்வையிட்டபோது சில குளறுபடிகளை காணமுடிகிறது. அனுமதிக்கப்பட்ட காலி இடத்தில் (வார்டு பி, பிளாக்3, சர்வே 29 பிரிவு) அனுமதிக்கப்பட்ட வரைபடத்தின்படி (பி.பி/ஆர் Tvl 37/2003) யான உள்கட்டமைப்புகள் உருவாக்கப்படவில்லை. முன்திட்டமிட்டு கோப்புகளை சரிசெய்துகொள்ள முயற்சியும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, மேலெழுந்தவாரியான ஆதாரங்கள் கோப்புகளில் காணப்படுகின்றன. எனவே நகராட்சித்துறை ரீதியிலான விசாரணை நடத்துவதற்கு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. நகராட்சி நலன்கருதி, மேற்படி கட்டுமானங்களுக்கு SCZMA-ன் அனுமதிபெறவும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.23**

குளச்சல் நகராட்சியில் அண்ணாசிலை அருகே அமைந்துள்ள கழிப்பிடத்தை வெள்ளை அடித்து மராமத்து பணிகள் மேற்கொள்ள நகராட்சி மன்றத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் மராமத்து பணிகள் மேற்கொள்வதற்கு ரூ. 5000/–க்கு மதிப்பீடு தயார் செய்து ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது. மேலும் மேற்படி பணியினை நகராட்சியில் பதிவு பெற்றுள்ள ஒப்பந்தக்காரர் திரு. இசக்கிமுத்து என்பவர் மூலம் மதிப்பீட்டு விகிதத்தில் ஒப்படைப்பு பணியாக மேற்கொள்வதற்கும், பணி உத்தரவு வழங்குவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : அவசரம் அவசியத்தின் பேரில் நகராட்சி மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதியின்பேரில் பணி மேற்கொண்டதையும், அதற்கான பணி உத்தரவு வழங்கியதையும் அதற்கான செலவினம் ரூ. 5000/– சம்மந்தப்பட்டவருக்கு வழங்குவதற்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 116 – அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.24</u>**

குளச்சல் நகராட்சிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் சுனாமி நிவாரணப் பணிகள் முடித்து நகராட்சிகளின் கூடுதல் இயக்குநர் மற்றும் கண்காணிப்பு பொறியாளர் அவர்கள் குளச்சல் நகராட்சிக்கு 30.01.2007, 31.01.2007 ஆகிய நாட்களில் ஆய்வு மேற்கொண்டார்கள். மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்திலிருந்து செயற் பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் ஆகியோர் 15.02.2007, 16.02.2007 ஆகிய நாட்களில் ஆய்வு மேற்கொண்டார்கள். அவர்கள் தல ஆய்வு மேற்கொண்டதை தரைப்படம் எடுத்து C.D. தயார் செய்ததற்கான செலவுத் தொகை ரூ. 2600/– க்கு அனுமதி வேண்டப்படுகிறது. இதனை சுனாமி நிதியிலிருந்து செலவு செய்யலாம்.

அ.குறிப்பு : அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 117 – அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.25</u>**

குளச்சல் நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சி திட்ட நிதி மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சி திட்ட நிதியிலிருந்து பாலத்தன் கரையில் இரண்டு ஆழ்துளை கிணறுகள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் தற்போது கூடுதலாக சீம்பிளிவிளை சாலை மற்றும், வெள்ளிபிள்ளையார் கோயில் சாலை சந்திப்பு பகுதி முதல் நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி வரை ஒரு பம்பிங் மெயின்அமைத்து அதன் மூலம் கூடுதலாக பம்பிங் செய்ய நடவடிக்கை மேற்கொள்வதற்கு நகர்மன்றத் தலைவர் அறிவுறுத்தியதின் பேரில் பாலத்தன்கரை முதல் நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டி வரை 6" PVC பைப் மூலம் பிரதான குழாய் அமைப்பதற்கு ரூ. 6.50 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து மன்ற ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 118 – அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.26</u>**

குளச்சல் நகராட்சி எல்கைக்குட்பட்ட கொட்டில்பாடு மற்றும் சிங்காரவேலன் காலனியில் உள்ள இரண்டு கழிப்பிடத்தில் தண்ணீர் தொட்டியிலிருந்து தண்ணீர் கசிந்து வீணாகிறது. ஆகவே அதனையடுத்து அதற்கு Floating Valve மற்றும் நல்லிகளை பொருத்துவற்குரிய செலவு தொகையாக ரூ. 500/– க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : அவசர அவசியத்தின் பேரில் நகராட்சி மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதையும், அதற்கான செலவு தொகை ரூ. 500/– யை சம்மந்தப்பட்டவருக்கு வழங்குவதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 119 – அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.27</u>**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2006–2007 –ன்கீழ் இந்நகராட்சி பகுதிகளில் சோடியம் விளக்குகள் அமைப்பதற்கு ரூ. 1.43 லட்சத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் (செயல்முறை எண்.அ3/8135/2006 நாள் 18.01.2007–ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி கீழ்கண்ட பகுதிகளில் சோடியம் விளக்குகள் அமைப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

பர்னட்டிவிளை F-II/1, F-II/29, F-II/37, F-II/48,
நெசவாளர் தெரு F-III/12, F-III/7, F-III/22, F-III/5
பள்ளிரோடு F-II/1, CMC 49, F-II/13 (School)
குளச்சல் பீச் F-I/2, F-II/105, F-II/16.
மரமடி F-I/100, FI/44, F-I/27
காமராஜர் சாலை F-II/20, F-I/33
கொட்டில்பாடு – 3
சாஸ்தான்கரை – 2
களிமார் –2 ஆகியன

இதில் கொட்டில்பாடு, சாஸ்தான்கரை, களிமார் ஆகிய பகுதிகளில் விளக்குகள் அமைப்பதற்கு மின்கம்பங்களை தேர்வு செய்ய மன்றம் முடிவு செய்யலாம்.

**அ.குறிப்பு :**

இந்நகராட்சி மின்கம்பியாளர் அனைத்துப் பகுதிகளையும் ஆய்வு செய்து கொட்டில்பாடு பகுதியில் கோயில் முன்பக்கம்–1 , பழைய ரேசன் கடை சந்திப்பு –1, மண்டைக்காடு சாலையில் F-II/107 மின்கம்பத்தில்–1, சாஸ்தான்கரை பகுதியில் வெள்ளியாகுளம் முருகன்கோயில் பக்கம் (F-II/96) ஒன்று, சாஸ்தன்கரையில் நகராட்சி எல்கையையொட்டி இசக்கி அம்மன் கோயில் பக்கம் F-II/126–ல் ஒன்று, களிமார் பகுதியில் மெயின்ரோட்டில் F-II/1 மின்கம்பத்தில் ஒரு விளக்கும், களிமார் சிவன்கோயில் எதிர்புறம் F-I/27–ல் 1 எனவும் பர்னட்டிவிளையில் F-II/29–க்கு பதிலாக அதனையடுத்துள்ள மின்கம்பத்தில் F-II/28 மற்றும் F-II/37–க்கு பதிலாக அதனையடுத்துள்ள F-II/38, நெசவாளர் தெருவில் F-III/22–க்கு பதிலாக அதனையடுத்துள்ள மின்கம்பம் F-III/21, மரமடி பகுதியில் F-I/100–க்கு பதிலாக அதனையடுத்துள்ள F-I/69, காமராஜர் சாலை FII/20–க்கு பதிலாக FII/19 ஆகிய பகுதிகளில் அமைத்தால் மேற்படி ஜங்சன்கள் இன்னும் பிரகாசமாக இருப்பதோடு சுற்றியுள்ள அதனையடுத்த பகுதிகளுக்கும் அதிக அளவில் வெளிச்சம் கிடைக்கும் என்று அறிக்கை சமர்ப்பித்துள்ளார். விபரம் மன்றத்தின் முடிவிற்கு.

**தீர்மானம் எண். 120 –சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பரிந்துரைத்துள்ள மின்கம்பங்களி (18 எண்ம்) ல் அவ்வாறே S.V. Lamp –கள் பொருத்திடவும் , ஏனைய ஏழு மின்கம்பங்களில் அலுவலகக் குறிப்பில் குறிப்பிட்டவாறு உள்ள மின்கம்பங்களில் S. V.Lamp பொருத்திடவும் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.28</u>**

இந்நகராட்சியின் கணனி பிரிவில் உதவித் திட்ட அமைப்பாளர் பணியிடம் 12.01.2001 முதல் காலியாக உள்ளதால், அலுவலகப் பணிகளில் தாமதம் ஏற்படாமல் இருக்க கணனி இயக்கம் மற்றும் கணனி சேவைப் பணிகளைக் கவனிக்க தற்காலிக அடிப்படையில் உள்ளூர் கணனி மையத்தின் மூலமாக 01.03.2007 முதல் 89 நாட்களுக்கு பணியாளர் நியமனம் செய்யவும், அதற்கான உத்தேச செலவு ரூ. 16,000/–க்கு அனுமதிக்கவும் மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 121 – அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 29</u>**

இந்நகராட்சியில் சமுதாய அமைப்பாளர் பணியிடம் காலியாக இருப்பதாலும், ஏற்கனவே சுனாமி பிரிவில் சமுதாய அமைப்பாளராக பணியாற்றி வரும் திருமதி.எம்.சாந்தி என்பவரின் பணிக்காலம் ஓரிரு மாதங்களில் முடிவடைவதாலும் காலியாக உள்ள பணியிடத்தில் மேற்படி திருமதி.எம். சாந்தி என்பவரை நிரந்தரம் செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களை கேட்டு மன்றம் தீர்மானிக்கலாம்.

**<u>அ.குறிப்பு</u>** : அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 122 – அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 30</u>

நகர்மன்றத் தலைவர் அவர்களின் உத்தரவிற்கிணங்க இந்நகராட்சிக்குட்பட்ட 24– வார்டுகளிலும் கொசு ஒழிப்பு புகை மருந்து 02.02.2007 முதல் 13.02.2007 முடிய நடை பெற்றதற்கு தேவையான டீசல் மற்றும் பெட்ரோல் வாங்கியதற்கு (ஒரு நாளைக்கு 20– லிட்டர் டீசல் மற்றும் 5– லிட்டர் பெட்ரோல் வீதம்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**<u>அ.குறிப்பு</u>** : அவசர அவசியத்தை முன்னிட்டு நகராட்சி மன்றத் தலைவரின் முன் அனுமதியின் பேரில் டீசல் மற்றும் பெட்ரோல் உள்ளூர் பெட்ரோல் பங்கில் வாங்கியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 123 – அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்.31</u>

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள வணிக வாளகத்தில் கடை எண் 15 மற்றும் 16 ஆகிய கடைகளில் நீர் கசிவு ஏற்பட்டு அதனால் கடைக்கு பாதிப்பு ஏற்படுகிறது என்று கடை வாடகைதாரர்களிடம் இருந்து எழுந்த புகாரின் பேரில் நகர்மன்றத் தலைவரின் அறிவுரையின் பேரில் தளம் ஆய்வு மேற்கொண்டதில் மேல் தளத்தில் உள்ள தொட்டியின் சிலாப் மற்றும் பூச்சு சேதமடைந்துள்ளது. ஆகவே அதனை சரிசெய்வதற்கு ரூ. 16,000/–க்கு மதிப்பீடு தயார் செய்து மன்றஅனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 124 – அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்.32</u>

குளச்சல் நகராட்சிக்கு மாநில நிதிக்குழு பரிந்துரையின் கீழ் 2005–2006–ம் ஆண்டு Low Population Density Geographical Disadvantage பிரிவின் கீழ் ரூ. 3.31 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்கு மூன்று பணிகள் தேர்வு செய்யப்பட்டு அப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. அதில் ரூ. 0.47 லட்சம் மீதமுள்ளது. இந்நிலையில் நகராட்சி மன்றத்தலைவரின் அறிவுரையின் பேரில் நரிக்கல் சந்திப்பில் இசக்கி அம்மன் கோயில் முன்புறம் சிமெண்ட் தளம் அமைத்து புல்லன் விளை மற்றும் காமராஜர் சாலைப் பகுதியில் வால்வு தொட்டி அமைப்பதற்கும் ரூ. 50,000/– க்கு மதிப்பீடு தயார் செய்து ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது. திட்டத் தொகை போக மீதித் தொகையினை பொது நிதியில் செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு :</u>** அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 125 – அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்.33</u>

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட சிங்காரவேலன் காலனியில் பெண்கள் பயன்படுத்தும் மூன்று அறை கொண்ட பெது கழிப்பிடம் உள்ளது. அதில் கழிவறையில் இருந்து வரும் பைப்புகள் உடைந்து கழிவுநீர் ஓடையும் சேதமடைந்து கழிப்பிடத்தை பயன்படுத்த முடியாத சூழ்நிலையில் உள்ளது. இந்நிலையில் நகராட்சி மன்றத்தலைவரின் அறிவுரையின் பேரில் மராமத்துப் பணிகள் மேற்கொள்வதற்கு ரூ. 5000/–க்கு மதிப்பீடு தயார் செய்து ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது. மேலும் மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி இந்நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு. தங்கமணி என்பவர் மூலம் மதிப்பீட்டு விகிதத்தில் ஒப்படைப்பு பணியாக மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 126 – அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்:34**

குளச்சல் நகராட்சி குடிநீர் திட்டப் பணிகளாகிய நீருந்தும் முக்கிய குழாய்களிலும் குடிநீர் வினியோக குழாய்களிலும் மற்றும் குடிநீர் திட்டத்தில் நீரேற்றும் நிலையஙகளில் பொருத்தப்பட்டுள்ள நீர் மூழ்கி மின் மோட்டார்கள், பேனல் போர்டுகள், பைப் லைன்கள் இவைகளில் அடிக்கடி ஏற்படும் பழுதுகளை நகர் மக்களின் நலனை கருத்தில் கொண்டும், போர்க்கால அடிப்படையிலும் நடவடிக்கை மேற்கொண்டு உடனடி பழுது பார்த்தும் தடையில்லாமல் குடிநீர் வினியோகம் பொதுமக்களுக்கு செல்ல வேண்டியுள்ளதால் கீழ்குறிப்பிட்டுள்ள வேலைகள் நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று முறைப்படி விலைப்புள்ளிகள் கோரப்பட்டு அதில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரருக்கு வேலை ஒப்படைத்து நல்ல முறையில் செய்து முடிக்கப்பட்டுள்ளது. விபரம் மன்றத்தின் பார்வைக்கு.

| வ.எண் | பணியின் விவரம் | தொகை |
|---|---|---|
| 1 | குளச்சல் நகராட்சி குடிநீர் திட்டத்தில் வி.கே.பி. மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அருகாமையில் அமைந்துள்ள 110 mm PVC விநியோக குழாய் பழுதுபட்டதை சரி செய்தல். | 1820 |
| 2 | துறைமுகத்தெருவில் காணிக்கைமாதா கோயில் தெற்குபக்கம் சாலையில் அமைந்துள்ள 110 mm PVC விநியோக குழாய் பழுதுபட்டதை சரி செய்தல். | 4320 |
| 3 | குளச்சல் காமராஜ் பேருந்து நிலையத்தின் அருகாமையில் அமைந்துள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டியில் புதிதாக 150 mm D/F சுவிஸ் வால்வு பொருத்துதல் | 5520 |
| 4 | குளச்சல் நகராட்சி குடிநீர் திட்டத்தில் குளச்சல் பரசேரி முக்கிய சாலையில் டெம்போ ஸ்டான்ட் பக்கம் 150 mm A.C முக்கிய குழாய் பழுதுப்பட்டதை சரிசெய்தல். | 3563 |
| 5 | குளச்சல் நகராட்சி குடிநீர் திட்டத்தில் பர்ணட்டிவிளை சந்திப்பில் அமைந்துள்ள ஆழ்குழாய் கிணற்றில் பொருத்தப்பட்டுள்ள 10 குதிரை வேகம் கொண்ட நீர்மூழ்கி மின்மோட்டார் பழுதுபட்டதை சரிசெய்தல் . | 11796 |
| 6 | பாலத்தான்கரை சாலைக்கு அருகாமையில் சம்பின் பக்கமுள்ள ஆழ்குழாய் கிணற்றில் பொருத்தபட்ட அமைந்துள்ள 10 குதிரை வேகம் கொண்ட நீர்மூழ்கி மின்மோட்டார் பழுதுபட்டதை சரிசெய்தல் . | 12226 |
| 7 | குளச்சல் நகராட்சி குடிநீர் திட்டத்தில் வெள்ளிபிள்ளையார் கோயில் தெருவில் அமைந்துள்ள ஆழ்குழாய் கிணற்றில் பொருத்தப்பட்டுள்ள நீர்மூழ்கி மின்மோட்டார் பழுதுபட்டதை சரிசெய்தல் . | 11554 |
| 8 | குளச்சல் நகராட்சி குடிநீர் திட்டத்தில் பீச்ரோட்டில் அமைந்துள்ள விநியோக குழாய்யில் பொருத்தப்பட்டுள்ள 150 mm C1 D/F சுவிஸ் வால்வு பழுதுபட்டதை சரிசெய்தல் . | 2500 |
| 9 | வெள்ளிபிள்ளையார் கோயில் தெருவில் அமைந்துள்ள 6–வது ஆழ்குழாய் கிணற்றில் பொருத்தப்பட்டுள்ள நீர்மூழ்கி மின்மோட்டார் பழுதுபட்டதால் அதனை அப்புறப்படுத்திவிட்டு அப்பகுதியில் அமைந்த 2–வது ஆழ்குழாய் கிணற்றில் பொருத்தப்பட்டுள்ள 10 குதிரை வேகம் கொண்ட நீர்மூழ்கி மின்மோட்டாரை கழற்றி 6–வது ஆழ்குழாய் கிணற்றில் பொருத்துதல் | 3576 |
| 10 | குளச்சல் நகராட்சி குடிநீர் திட்டத்தில் புதுத்தெருவில் அமைந்துள்ள குடிநீர் குழாய்கள் இரண்டு இடஙகளில் உடைப்பு ஏற்பட்டதை சரிசெய்தல் . | 1870 |
| 11 | பாலத்தன் கரை சாலையில் அமைந்துள்ள 140 mm PVC குழாய் இரண்டு இடஙகளில் உடைப்பு ஏற்பட்டதை சரிசெய்தல் . | 4882 |
| 12 | நகராட்சி வளாகத்தில் அமைந்துள்ள மேல்நிலை நீர்தேக்கத்தொட்டியின் பக்கம் பொருத்தப்பாபட்டுள்ள 150 mm C1 D/F சுவிஸ் வால்வு பழுதுபட்டதை சரிசெய்தல் | 5570 |

| | | |
|---|---|---|
| 13 | குளச்சல் நகராட்சி குடிநீர் திட்டத்தில் காமராஜ் சாலையில் முத்தாரம்மன் கோயில் பக்கமும், மற்றும் நரிக்கல் பகுதியில் சாஸ்தான் கோவில் பக்கமும் அமைந்துள்ள 90 mm PVC குழாய் பழுதுபட்டதை சரிசெய்தல் . | 2420 |
| 14 | கள்ளியடைப்பு திருவள்ளுவர் சாலையில் குடிநீர் விநியோக குழாய் நான்கு இடங்களில் உடைப்பு ஏற்பட்டு பழுதுபட்டதை சரிசெய்தல் | 4523 |
| 15 | குளச்சல் நகராட்சி குடிநீர் திட்டத்தில் நரிக்கலில் இரண்டு இடங்களிலும் மற்றும் நர்சரி பக்கமும் மொத்தம் மூன்று இடங்களில் 63 mm PVC குழாய் பழுதுபட்டதை சரிசெய்தல். | 2891 |
| 16 | குளச்சல் நகராட்சி குடிநீர் திட்டத்தில் ஈழக்காணிவிளையில் ஜாண்சன் வீட்டுப்பக்கம் அமைந்துள்ள 63 mm PVC குழாய், 90 mm PVC குழாயினை இணைத்து சரிசெய்தல். | 5701 |
| 17 | குளச்சல் மெயின் ரோட்டில் மைய்யூரி டெக்ஸ் எதிரில் அமைந்துள்ள 150 mm PVC குழாய் பழுதுபட்டதை சரிசெய்தல் | 3795 |
| 18 | குளச்சல் நகராட்சி குடிநீர் திட்டத்தில் கொட்டில்பாடு இரண்டாவது பாலம் அருகில் அமைந்துள்ள 63 mm PVC குழாய் பழுதுபட்டதை சரிசெய்தல் . | 1892 |

<u>அ.குறிப்பு</u> : அவசர அவசியத்தை முன்னிட்டும், நகர் மக்களின் நலனை கருத்தில் கொண்டும், நகராட்சி மன்றத் தலைவரின் முன் அனுமதியுடன் மேற்குறிப்பிட்டுள்ள குடிநீர் திட்டப் பணிகளின் விலைப்புள்ளிகள் முறைப்படி பெற்று அதில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு. தெய்வசாமி என்பவரிடம் பணி ஒப்படைத்து நல்லமுறையில் முடிக்கப்பட்டது. எனவே அதற்கு செலவானத் தொகை ரூ. 81,373/–ஐ வழங்குவதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 127 – அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண் :35

<u>நகராட்சி மன்றத் தலைவர் திரு. ஜே. ஜேசையா அவர்கள் கொண்டு வரும் தீர்மானம் :</u>

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட மேற்கு கடற்கரை சாலையோரத்தில் அமைந்துள்ள பெரியநாயகி காலனி பகுதியில் அனைத்து பேருந்துகளும் நின்று செல்லும் வண்ணம் ஓர் பேருந்து நிறுத்தம் தேவைப்படுகின்றது. இதனால் அப்பகுதியையொட்டி அமைந்துள்ள சிங்காரவேலன் காலனி மற்றும் சுனாமி மறுவாழ்வு புதிய குடியிருப்பு பகுதிகளான Ephicor Colony, காரிதாஸ் காலனி, K.S.S.S. நகர் மற்றும் தோழமை காலனி பகுதிகளில் வாழும் மக்களும் இதனால் பயன்பெறுவர். எனவே உடனடியாக V.Fast & FP பேருந்துகள் நிறுத்தத்தை சாயக்காரக்குடி பாலத்தருகில் அமைத்து தர TNSTC நிர்வாகத்தை கேட்டு உரிய அனுமதி பெற மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண். 128 – ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் :36</u>

<u>குளச்சல் நகராட்சி மன்றத்தின் 11–ம் வார்டு நகராட்சி மன்ற உறுப்பினர் திரு. சி. ஜாண் லோப்பஸ் அவர்கள் கொண்டுவரும் தீர்மானம் :</u>

(1) F-II/66 முதல் F-II/67 மின்கம்பி அமைத்து மின் விளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

(2) கதவு எண். 12/3.பி வீடு முதல் க.எண்.11/93 வீடு வரை சாக்கடை அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்

(3) துறைமுகத்தெரு 1–ல் அமைந்துள்ள அங்கன்வாடி மையத்திற்கு மின்சார வசதி, தரை தளம் அமைத்தல், மேஜை அடுப்பு வசதி செய்வது தொடர்பாக மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண். 129 – ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் :37</u>

<u>குளச்சல் நகராட்சி மன்றத்தின் 17–ம் வார்டு நகராட்சி மன்ற உறுப்பினர் திரு. சி. முருகன் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம் :</u>

நரிக்கல் ரோட்டில் பரம்புவிளாகம் பகுதியில் ஒரு பொதுநல்லி அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண். 130 – ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் :38**

குளச்சல் நகராட்சி மன்றத்தின் 19—ம் வார்டு நகராட்சி மன்ற உறுப்பினர் திருமதி. வே. கோமளா அவர்கள் கொண்டு வரும் தீர்மானம் :

(1) F-III/24 புதிய மின்விளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

(2) 19-வது வார்டு வடக்கு தெருவில் வீ.எண்.22/116எ திரு.ஆறுமுகம் அவர்களின் வீட்டின் அருகில் பொது குடிநீர் நல்லி அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

(3) 19 வார்டு தெற்கு தெருவில் பால் வியாபாரம் செய்யும் தனம் என்ற சேவியர் ராஜ் வீட்டின் 22/68 அருகில் புதிய மின்கம்பம் அமைத்து புதிய மின்விளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண். 131 – ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் :39**

குளச்சல் நகராட்சி மன்றத்தின் 23 மற்றும் 24—ம் வார்டு நகராட்சி மன்ற உறுப்பினர்கள் திருமதி. எஸ். சீதை மற்றும் திருமதி. எஸ். ஷீலா ஜெயந்தி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம் :

குளச்சல் ஜேம்ஸ் மருத்துவமனையிலிருந்து நகராட்சியின் கழிவு நீர் வடிகால் மூலமாக புதுத்தெரு மற்றும் சாஸ்தான்கரை ஒற்றைக்கண் பாலம் வழியாக வெளியேறும் கழிவுகள் புல்லன்விளை, நரிக்கல் சாலை, மற்றும் சிங்கன்காவு சாலை பகுதிகளில் பெரும் துர்நாற்றத்தை கடந்த பல வருடங்களாக ஏற்படுத்தி வருகிறது. கொசுத் தொல்லையினாலும் கழிவுகளின் துர் நாற்றத்தினாலும் மேற்படி பகுதிகளில் வாழும் மக்களுக்கு மிகுந்த சுகாதாரக்கேடு ஏற்பட்டுள்ளது. எனவே மேற்படி மருத்துவமனையிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுகள் நகராட்சி கழிவு நீர் ஓடை வழியாக ஓடுவதை தடை செய்திட மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண். 132 – நிலத்தலடி நீர் பாதிக்காத வண்ணம், மேற்படி கழிவுகளை மேற்படி மருத்துவமனை நிர்வாகம் அவர்களுக்கு பாத்தியப்பட்ட ஏதாவது இடத்தில் சேகரம் செய்திடவும், சேகரம் செய்யப்படுகின்ற கழிவுகளை உறுஞ்சு லாறிகள் மூலம் வெளியேற்றம் செய்திடவும், மருத்துவமனை நிர்வாத்தினை அறிவுறுத்திடவும், மேற்படி சேகரத்தொட்டி கட்டி முடிப்பதற்கு வசதியாக மருத்துவமனை நிர்வாகத்திற்கு 31.03.07 வரை கால அவகாசம் கொடுப்பதற்கும் சேகரத்தொட்டியிலிருந்து கழிவு நீர் உறிஞ்சு லாறி மூலம் கழிவு நீரை அப்புறப்படுத்துவதற்கு நகராட்சி நிர்வாகம் உதவிடவும் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் :40**

குளச்சல் நகராட்சி மன்றத்தின் 23—ம் வார்டு நகராட்சி மன்ற உறுப்பினர் திருமதி. எஸ். சீதை அவர்கள் கொண்டுவரும் தீர்மானம் :

(1) கடவ நாடு பேங்கின் அருகிலுள்ள மழைநீர் ஓடையின் மேற்புறமுள்ள கலுங்கினை இடித்து மழைநீர் ஓடையின் மேல் வாகனங்கள் செல்ல தடையாகவுள்ளது. அதனை சிறிது குறகலாக கட்டி மேல் மூடி அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

(2) சாஸ்தாங்கரை அரசு தொடக்கப்பள்ளியின் முன்புறமுள்ள F-II மின்கம்பத்தில் ஒரு குழல் விளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

(3) 29/1 எ வீட்டின் முன்னுள்ள மின்கம்பத்தில் லைன்கள் மிகவும் தாழ்ந்த நிலையில் காணப்படுகிறது. ஆகவே அதன் இடையில் ஒரு மின்கம்பம் நட்டு ஒரு குழல் விளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

(4) ஒற்றைக்கண் பாலத்தின் அருகில் உள்ள மழைநீர் ஓடையின் கரை இடிந்து தண்ணீர் தேங்கி நிற்கும் நிலையை மாற்றி வடிகால் கட்டி மேல்மூடி கேஸ் குடோன் வரை அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

(5) புல்லன்விளை முடிவில் இருந்து பூக்குழி நரிக்கல் வரை மழைநீர் வடிகால் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

(6) வாய்க்கால் கரையில் தைநாத்தன்கரை என்ற பகுதியில் பெண்கள் குளிக்கும் ஒரு படித்துறை அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

(7) 23–ம் வார்டில் 29/66.எ., 29/66, 29/65.பி., 23–190/1, 23–190/2 ஆகிய வீடுகளுக்கு இடையில் பொது வழி உள்ளது. இந்த குறுகிய பாதைக்கு கழிவுநீர் ஓடை இல்லாமல் மிகவும் சுகாதார கேடாக உள்ளது. எனவே மேற்படி பகுதியில் கழிவுநீர் ஓடையும், ஒரு பொதுக் குடிநீர் குழாயும் அமைத்து தர மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண். 133 – ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

நகராட்சி மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

**குளச்சல் நகராட்சி**

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் 28.02.2007–ம் நாள் புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நடைபெறும். தாங்கள் தவறாது கலந்து கொள்ள அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தலைவர்
குளச்சல் நகராட்சி மன்றம்

<u>பொருள்கள்</u>

<u>பொருள் எண். 1</u>

2007–2008–ம் ஆண்டிற்குரிய அறிக்கையில் நகராட்சிக்கு சொந்தமான டாக்டர் அம்பேத்கார் தினசரி சந்தையில் அமைந்துள்ள ஸ்டால்களுக்கு கட்டணத்தினை கீழ்கண்டவாறு 01.04.2007 முதல் உயர்வு செய்து வசூல் செய்ய மன்றம் முடிவு செய்யலாம்.

| வ.எண். | கட்டணம் மாற்றம் செய்யும் இனம் | ஏல அறிக்கையில் கண்டுள்ள கட்டணம் நாள் ஒன்றுக்கு ரூ. | மாற்றம் செய்யப்பட்ட கட்டணம் நாள் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|---|
| 1 | தினசரி சந்தையில் உள்ள ஸ்டால்களுக்கு வாடகை நாள் ஒன்றிற்கு | 15/– | 20/– |
| 2 | மட்டன் ஸ்டால் நாள் ஒன்றுக்கு | 25/– | 30/– |
| 3 | சிக்கன் ஸ்டால் | 25/– | 30/– |

<u>அ.குறிப்பு :</u>

அவசர அவசியத்தின்பேரில் நகராட்சி மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்றும் தினசரி சந்தையில் ஸ்டால்களின் வாடகையினை ரூ. 15/– லிருந்து ரூ.20/ ஆகவும்,
மட்டன் ஸ்டால் மற்றும் சிக்கன் ஸ்டால் வாடகையினை ரூ. 25/–லிருந்து ரூ. 30/– ஆகவும் உயர்த்தி ஏலதாரர்களுக்கு அறிவித்ததை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 134 – அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 2</u>

2007–2008–ம் ஆண்டிற்கு நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட குத்தகை உரிம இனங்களை 26.02.2007–ல் பகிரங்க பொது ஏலம் விடப்பட்டதில் கேட்கப்பட்ட உயர்ந்த ஏலக்கேள்வி விபரம் கீழ்கண்டவாறு மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

| வ. எண். | குத்தகை இனம் | உயர்ந்த ஏலக் கேள்வி | சென்ற ஆண்டு ஏலத்தொகை | மூன்றாண்டு சராசரி தொகை | உயர்ந்த ஏலக் கேள்விதாரர் பெயர் |
|---|---|---|---|---|---|
| 1 | தினசரி சந்தை | 3,32,000 | 3,10,700 | 4,51,900 | திரு.கே.நூர்முகம்மது |
| 2 | பிஸ்மாங்கர் பீஸ் | 77,500 | 1,00,600 | 99.900 | திரு.இ.பால் ஞான சேகரன் |
| 3 | பேருந்து நிலைய கட்டண கழிப்பிடம் | 66,750 | 66,500 | 53,500 | திரு.எஸ். முருகன் |
| 4 | பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பஸ்களுக்கு கட்டணம் வசூலித்தல் | வைப்புத் தொகை செலுத்தி ஏலம் கேட்க எவரும் முன்வரவில்லை | | | |
| 5 | ஆடு, மாடு அடித்தல் | | | | |
| 6. | அண்ணாசிலை கழிப்பிடம் | | | | |

<u>அ.குறிப்பு :</u>

(1) வரிசை எண். 1–ல் கண்ட இனங்கள் மூன்றாண்டு சராசரி தொகையினை விட குறைவாக உள்ளது. மேலும் ஸ்டால்களுக்குரிய சுங்கம் உயர்வு செய்யப்பட்டுள்ளதால் அதற்கேற்ப ஏலக் கேள்வி இல்லாததாலும் இவ்வினத்திற்கு குத்தகை உரிமத்தினை மறு ஏலம் விடலாம்.

2) வரிசை எண். 2 –க்குரிய உயர்ந்த ஏலக்கேள்வி 2006–07 ஆம் ஆண்டின் குத்தகைத் தொகை மற்றும் மூன்று வருட சராசரித் தொகையினை விட குறைவாக உள்ளதால் இவ்வினத்திற்கான குத்தகை உரிமத்தினை மறு ஏலம் விடலாம்.

(3) வரிசை எண். 3 உச்ச ஏலத் தொகையினை ஒப்புக் கொள்ளலாம்.

(4) வரிசை எண். 4, 5, 6 ஏலம் கேட்க எவரும் முன்வரவில்லையாதலால் மறு ஏலம் விடலாம்.

**தீர்மானம் எண். 135 – அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

<u>**பொருள் எண். 3**</u>

குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான காமராஜ் பேருந்து நிலையத்தில் கடைகளை வாடகைக்கு எடுத்துள்ள குத்தகைதாரர்கள் மாதக் கணக்காக வாடகை செலுத்தாமல் உள்ளனர். இவர்களுக்கு பலமுறை நேரில் அறிவுறுத்தியும் பாக்கித் தொகையினை கீழ்க்கண்ட விவரப்படி ( மூன்று மாதமும் அதற்கு மேலும் பாக்கி வைத்திருப்போர்) செலுத்தவில்லை. விபரம் மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

| வ.எண். | கடை எண் | குத்தகைதாரர் பெயர் | வாடகை பாக்கிக்கான காலம் | செலுத்த வேண்டிய பாக்கித் தொகை. |
|---|---|---|---|---|
| 1 | 37 | .சகாய ஜாண் ஜுல்ட் | 8/2006 முதல் 2/2007 முடிய (7 மாதங்கள்) | 3850 x 7 = ரூ. 26,950/– |
| 2 | 38 | சகாய ஜாண் ஜுல்ட் | 10/2006 முதல் 2/2007 முடிய ( 5 மாதங்கள்) **மொத்தம்** | 650 x 5 = ரூ. 3,250/– ——————— ரூ. **30,200/-** |
| 3 | 39 | எஸ்.எம்..யூசுப்கான் (Vacant Land) | 10/2006 முதல் 2/2007 முடிய (5 மாதங்கள்) | 331 x 5 = ரூ. 1,655/– |
| 4 | 29 | என். ஐயப்பன் | 8/2006 முதல் 2/2007 முடிய ( 7 மாதங்கள்) | 442 x 7 = ரூ. 3,094/– |
| 5 | 28 | ஜே. ஆன்றனி | 9/2006 முதல் 2/2007 முடிய ( 6 மாதங்கள்) | 442 x 6 = ரூ. 2,652/– |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | 27 | ஜே. ஆன்றனி | 2/2006 முதல் 2/2007 முடிய (13 மாதங்கள்) | 485 x 13 = ரூ. 6,305/– |
| 7 | 24 | எல். வினிஸ்டர் | 12/2006 முதல் 2/2007 முடிய (4 மாதங்கள்) | 500 x 3 = ரூ. 1,500/– |
| 8 | 25 | எல். வினிஸ்டர் | 11/2006 முதல் 2/2007 முடிய (4 மாதங்கள்) | 500 x 4 = ரூ. 2,000/– |
| 9 | 23 | G. டிகால் | 10/2005 முதல் 1/2006 முடிய (4 மாதங்கள்)<br>2/2006 முதல் 2/2007 முடிய (13 மாதங்கள்)<br>**மொத்தம்** | 450 x 4 = ரூ.1,800/–<br>518 x 13 = ரூ. 6,734/–<br>----------<br>ரூ **.8,534/–** |
| 10 | 21 | R. பாலன் | 1/2006 முதல் 2/2007 முடிய ( 14 மாதங்கள்) | 458 x 14 = ரூ. 6,452/– |
| 11 | 20 | A. ஜெயசேகர் | 4/2006 முதல் 2/2007 முடிய ( 11 மாதங்கள்) | 442 x 11 = ரூ. 4,262/– |
| 12 | 19 | D. கோவிந்தராஜ் | 8/2006 முதல் 2/2007 முடிய ( 7 மாதங்கள்) | 476 x 7 = ::ரூ.3,332/– |
| 13 | 18 | P. கென்னடி | 11/2006 முதல் 2/2007 முடிய ( 4 மாதங்கள்) | 518 x 4 = ரூ. 2,072/– |
| 14 | 17 | S. ராஜா சார்லெட் செல்வி | 11/2006 முதல் 2/2007 முடிய (4 மாதங்கள்) | 518 x 4 = ரூ.2,072/– |
| 15 | 16 | C. முருகன் | 11/2006 முதல் 2/2007 முடிய (4 மாதங்கள்) | 468 x 4 = ரூ. 1,872/– |
| 16 | 13 | V.ருத்ரபிரசாதன் தம்பி | 10/2006 முதல் 2/2007 முடிய (5 மாதங்கள்) | 754 x 5 = ரூ. 3,770/– |
| 17 | 6 | P. சாகுல் அமீது | 10/2006 முதல் 2/2007 முடிய( 5 மாதங்கள்) | 1110 x 5 = ரூ. 5,550/– |

**அ.குறிப்பு :**

மூன்று மாதங்களும், அதற்கு மேலும் வாடகை பாக்கி வைத்திருப்போரின் கடைகளுக்கு ஏழு நாட்களுக்குள் செலுத்த இறுதி அறிவிப்பு கொடுத்து, அதன் பின்னரும் பாக்கித் தொகை செலுத்தாதவர்களுக்கு குத்தகை நிபந்தனைகளின்படி கடையின் உரிமத்தை ரத்து செய்து மறு ஏலம் விட மன்றம் முடிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 136 – அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

நகராட்சி மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி